**தலைப்பு 119 – மின்சக்தி மற்றும் வலு அமைச்சு**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 119 – மின்சக்தி மற்றும் வலு அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் மின்சக்தி மற்றும் வலு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஒக்தோபர் 02 ஆந் திகதி பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மின்சக்தி மற்றும் வலு அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுத்திகரிப்பாளர்களிற்காக கட்டாய பதிவு கட்டணங்களிற்காக 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டிற்காக இரண்டு கம்பனிகளிடமிருந்து பெறவேண்டிய ரூபா 3.1 மில்லியன் தொகை 2024 மே மாதம் வரையும் அமைச்சால் பெறப்பட்டிருக்கவில்லை. | ஒரு கம்பனி 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது அரையாண்டிற்காக ரூபா 87,260 ஆன தொகை நிலுவையாக உள்ளதுடன் இந்த அமைச்சுடான ஒப்பந்த நடைமுறை பூர்த்தியான பின்னர் மற்றும் ஒப்பந்த நடைமுறையுடன் தொடர்பபட்ட ஏனைய கம்பனிகள் 2023 இரண்டாவது அரையாண்டில் இருந்து உரிய அனுமதிப் பத்திரங்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | காலரீதியாகவும் முறையாகவும் வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கனிமப்பொருள் வியாபாரத்திற்காக இங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் இருந்து 2023 இன் முதலாவது அரையாண்டு மற்றும் 2022 இரண்டாவது அரையாண்டில் நிலவிய முறையே ரூபா 2.4 மில்லியனன் மற்றும் ரூபா 2 மில்லியன் அனுமதிப் பத்திரத்தை சேகரிப்பதற்கு தவறியிருந்தது. | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளிற்காக கனிமப்பொருள் வியாபாரத்திற்காக அனுமதிப்பத்திர கட்டணம் செலுத்துவதற்கு CPC அறிவித்திருந்தது. | காலரீதியாகவும் முறையாகவும் வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சிற்கு மின்பிறப்பாக்கிகளின் ஏற்பாடுகளிற்காக 2010 இலிருந்து பெறவேண்டிய ரூபா 15.8 மில்லியன் இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டிற்காக மின்சார சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் குளிரூட்டிகளின் திருத்தம் மற்றும் பராமரிப்பிற்காக 2008 இலிருந்து | இந்த தொகைகள் தொடர்பான தகவல்கள் இலங்கை மின்சார சபையிடமிருந்து வேண்டியிருந்ததுடன் தகவல்கள் பெற்ற பின்னர் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பொறுப்புகள் தொடர்பான பதிவேடுகள் முறைப்படி பேணப்பட வேண்டும். |

பெறவெண்டிய ரூபா 9.1 மில்லியன் என்பன இருந்த போதிலும் அமைச்சின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அத்தொகைகள் பொறுப்புக்களாக காட்டப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்**

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு மாதிரிச் செவ்வை கணக்காய்வு ஒதுக்கீட்டின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது.

| அவதானிப்புகள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| **(i)** நிதிப்பிரமாணம் 104.(3) மற்றும் 104 (4) | 2021-2023 காலத்தின் போது நிகழ்ந்த 07 வாகன விபத்துக்களின் ஆரம்ப அறிக்கை மந்தமான தாமதத்துடன் வழங்கப்பட்டிருந்ததுடன் இறுதி அறிக்கை 2024 மே மாதம் வரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை | திருத்தங்கள் மற்றும் பொலீஸ் அறிக்கை உடனடியாக பெறப்பட்டது, நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் உரிய அறிக்கைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 2/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்தவ அறிக்கை | அமைச்சிற்கு சொந்தமான வாகனங்கள் முறையாக மாற்றப்படாமல் இலங்கை அனுசக்தி ஒழுங்குபடுத்தல் சபையால் பயன்படுத்தப் படுகின்றதுடன் இன்னொரு அமைச்சு, செயற்திட்டங்கள் மற்றும் சபைக்கு சொந்தமான 03 வாகனங்கள் உரிமையான்மையை கையேற்காமல் நீண்ட காலமாக அமைச்சால் பயன்படுத்தப்படுகின்றது. | வழக்கு தொடருதல் தொடர்புபட்ட வாகனம் உள்ளது, வழக்கு முடிவடைந்த பின்னர் கையளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் இன்னொரு அமைச்சிற்கு சொந்தமான வாகனத்தின் உரிமை யான்மையின் பதிவை உறுதிப்படுத்தி பெறுவதற்கும் கையேற்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. செயற்திட்டம் பூர்த்தியாக்கப் பட்டிருக்காமையால் செயற்திட்டத்திற்கு சொந்தமான வாகனம் கையேற்க முடியாதி | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ருந்ததுடன் அமைச்சிற்கு சபையால் உடமை யாக்கப்பட்ட வாகனத்தை கையேற்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | |
| (இ) | மின்னியல் அரசாங்க கொள்வனவு முறைமை (e-GP முறைமை) அமுலாக்கல் தொடர்பாக 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய 08/2019 ஆம் இலக்க அரச நிதிக் சுற்றறிக்கை | சகல அரசாங்க நிறுவனங்களும் 2020 சனவரி 31 இற்கு முன்னர் e-GP முறைமையில் பதியப்பட வேண்டிய போதிலும் அமைச்சு 2024 ஏப்ரல் 30 வரையும் முறைமையில் பதியப்பட்டிருக்கவில்லை. | அமைச்சு மின்னியல் அரசாங்க கொள்வனவு முறைமையில் (e-GP முறைமை) இன்னமும் பதியப்பட்டிருக்காத போதிலும் அதனை பதிவு செய்தல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு கவனத்திற்கொண்டது. | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

### 3.1.1 செயற்திட்ட நிறைவேற்றலில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்கள்** | | |
| (i). பொலிப்றோ லங்கா கமபனி அகற்றப்பட்ட பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவை பயன்படுத்தி எரிபொருள் உற்பத்தி செய்யும் நோக்குடன் 2008 இல் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கீழ் தாபிக்கப்பட்டிருந்தது. அமைச்சு 60 சதவீதம், உற்பத்தியாளர் 30 சதவீதம் மற்றும் 2008 ஆம் ஆண்டில் 10 சதவீதத்திற்கு சொந்தமான மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் மினறல் வளங்கள் ஆராய்ச்சி பீடம் என்பவற்றிற்கு சொந்தமானதுடன் 2018 செப்தெம்பர் 26 இல் மீளமைக்கப்பட்டிருந்த இந்த கம்பனியின் உரிமையான்மை 60 சதவீதத்தை அரசாங்கம் இழந்திருந்ததுடன் கம்பனியின் சொத்துக்கள் அறவிடும் வரை மற்றும் தொடர்புபட்ட அக்கறை | மத்திய சுற்றாடல் அதிகாரசபை 2024 ஆம் ஆண்டிற்காக கம்பனிக்கு கழிவகற்றல் முகாமைத்துவ அனுமதிப் பத்திரத்தை வழங்கியிருக்கவில்லை. மேலும், அரசாங்கத்திற்கு கம்பனியிலிருந்து ரூபா 83 மில்லியன் சொத்தை அறவிடுவதற்கு கம்பனியின் அபிவிருத்திக்காக மேற்கொள்ள வேண்டிய பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளடங்கலாக அமைச்சிலிருந்து விரிவான செயற்திட்ட பரிந்துரைகளை பெறுவதற்கு தீர்மானித்தது. அதேபோல, இந்த நிறுவனம் அரசாங்க கம்பனியாக நீண்டகாலம் இருக்கவில்லை. அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை அறவிடும் நோக்கில் நிதி அமைச்சின் கீழ் நிறுவனத்தை | அரசாங்கம் முதலீடு செய்கையில் அதன் எதிர்கால நலனிற்காக பாதுகாப்பு மற்றும் இலாபத் தண்மையில் முறையாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உடையோர் கம்பனியினுடைய உரிமையான்மையின் 1 சதவீதம் அமைச்சு கொண்டிருந்தது. மீளமைக்கும் நேரத்தில் கம்பனியால் வைத்திருந்த சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 83 மில்லியனாக இருந்ததுடன் 10 ஆண்டுகளில் அரசாங்கம் அறவீடு செய்யும் அடிப்படையில் முதலீட்டுடாளரிற்கு பெறுமதி வழங்கப்பட்டிருந்தது. 2024 செப்தெம்பர் அளவில் முதலட்டாளர்களிற்கு கையளிக்கப்பட்டிருந்த இந்த கம்பனி 6 ஆண்டுகளை கடந்திருந்த போதிலும் கம்பனியின் செயற்பாடுகள் தொடங்கப்பட்டிருக்காததுடன் அரசாங்கத்திற்கு உடமையான தொகையை அறவிடுதல் தொடர்பில் முக்கியமற்றிருந்தது. | கொண்டுவருவதற்கு அவசியமான வழிகாட்டலை வழங்குவதற்கு அமைச்சிற்கு வெண்டுகை செய்திருந்தது. | |
| (ii). ரூபா 560 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் SOREM செயற்திட்டத்தின் கீழ் சபுகஸ்கந்த ஒயில் சுததிகரிப்பு விரவாக்க மற்றும் நவீனப்படுத்தல் செயற்திட்டம்) இரண்டு செயற்திட்டங்கள் (இல.2035 மற்றும் இல 2227) மற்றும் ரூபா 705 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மாவிமா வீதி புணர்நிர்மான செயற்திட்டம் (இல 2036) காணி சுவீகரிப்பிலுள்ள தாமதம் காரணமாக மீளாய்வாண்டு இறுதி வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | அந்த காணி சுவீகரிப்பு தொடர்பில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. நீதி மன்ற தீர்ப்பின் பின்னர் இழப்பீட்டு கொடுப்பனவு பூர்ததியாக்குவதற்கு நடவடிககை எடுக்கப்படுவதுடன் காணிச் சுவீகர்ப்பு நடவடிக்கைகள் பூர்ததியான பின்னர் செயற்திட்ட வேலைகள் தொடங்கப் படுமெனவும் தெரிவிக்கப் பட்டிருந்தது. பிரிவு 4 இன் கீழ் பிரதேச செயலாளரின் ஊடாக காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் செய்யப்படுகின்றன. | அமைச்சின் கீழ் நிறுவனங்களால் அமுலாக்கப்பட வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பில் முறையான மேற்பார்வையை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் செய்ய்பட வேண்டியதுடன் செயற்திட்டங்களை பிரச்சனையற்ற நிலைகள் விரைவான பூர்த்தியாக்கல் என்பவற்றில் முறையான தலையீடு செய்யப்பட வேண்டும். |
| (iii). கொழும்பு துறைமுகத்திற்கு கொலன்னாவலிருந்து சேரம் நுழைவு வாயில் வரை இருந்த 10 அங்குல குழாய் வழி மீளமைப்பதற்கு ரூபா 809.8 மில்லியன் தொகை மதிப்பிடப் பட்டிருந்ததுடன் செயற்திட்ட அறிக்கை பிரகாரம் 2022 ஏப்ரலிற்கும் 2023 ஏப்ரலிற்கும் இடையில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென திட்டமிடப்பட்ட பொதிலும் செயற்திட்டமானது மீளாய்வாண்டு இறுதிவரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | இருக்கின்ற 14'' குழாய்வழிக்கு பதிலாக 18'' குழாய்வழி நிர்மாணிப்பதற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் இருந்து அனுமதி பெறப்பட்டிருந்ததுடன் கொள்வனவு நடவடிக்கைகளை தொடங்குவதற்கு அமைச்சரவையின் அனுமதி பெறுவதற்கு அவசியமான ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. | அமைச்சின் கீழ் நிறுவனங்களால் அமுலாக்கப்பட வேண்டிய செயற்திட்டங்கள் தொடர்பில் முறையான மேற்பார்வையை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் செய்ய்பட வேண்டியதுடன் செயற்திட்டங்களை பிரச்சனையற்ற நிலைகள் விரைவான பூர்த்தியாக்கல் என்பவற்றில் முறையான தலையீடு செய்யப்பட வேண்டும். |

(ஆ) **நிலைபேறான மின்வலு அதிகாரசபையால் அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

| | | |
|---|---|---|
| கலமுடுவ, உடகல டெபோகக மற்றும் மெடகெலவின் 03 கிராமங்களிற்கு புதுப்பிக்ககூடிய மீன்வலுவை பயன்படுத்தி சிறிய மின்நிலையங்கள் ஊடாக மின்சார வசதிகளை வழங்குவதற்கு நிலைபேறாற மின்வலு அதிகாரசபை 2021 ஆம் ஆண்டில் ரூபா 56.5 மில்லியன் ஒதுக்கீடு வழங்கியிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் கலமுடுன கிராமத்திற்கு மாத்திரம் ரூபா 33.3 மில்லியன் செலவழித்த பின்னர் மின்சாரம் வழங்கப்பட்டது. இந்த செயற் திட்டத்தில் உடகல டெபோக்க மற்றும் மெடகெல செயற் திட்டங்கள் பூர்த்தியாக்குவதற்கு 2023 திசெம்பர் 31 வரையும் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் தாமதப்பட்டிருந்தது. ஒதுக்கீட்டின் பயன்பாடு ரூபா 33.3 மில்லியனாக இருந்ததுடன் இசெயற்திட்டத்தின் இருக்கின்ற பகுதிகள் இன்னமும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டத்தின் அமுலாக்கலின் போது நாட்டில் கோவிட் நோய்தொற்று மற்றும் பொருளாதார சிக்கல் என்பவற்றால் மதிப்பிடப்பட்ட விலையில் அதிகரிப்பு என்பன இரண்டு கிராமங்களிலும் இருக்கின்ற செயற்திட்ட வேலைகளை மேற்கொள்வதற்கு சாத்தியமற்றிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டததின் சமூக மற்றும் சிக்கன பெறுமதியை கருத்திற் கொண்டு இலங்கை நிலைபேறான மின்வலு அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் மிகுதியாக இருக்கின்ற வெலைகளின் பூர்த்தியாக்கல் தொடர்பான நிதி விடயங்கள் தொடடர்பில் உரிய செயற்திட்ட கம்பனிகளுடன் பேச்சு வார்த்தை தொடங்கியிருந்ததுடன 2024 ஆம் ஆண்டில் திரும்பவும் கேள்வி கொரி செயற்திட்டத்தை தொடருவதற்கு தேவையான படிமுறைகளை எடுத்திருந்தது. | தாமதமில்லாமல் செயற்திட்டங்களை பூர்த்தியாக்கவும் நலன்களை பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2. வெளிநாட்டு உதவியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் செயலாற்றல்

### 3.2.1 செயற்திட்ட நிறைவேற்றலில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 19,288 மில்லயன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் தேசிய நிலையத்திற்கு 31 MW இயலளவுடைய அமுலாக்குகின்ற நோக்குடன் மொறக்கொல்ல நீர்மின்சார பொறி நிர்மான செயற்திட்டம் 2014 இல் தொடங்குவதற்கு திட்டமிடடப்பட்ட போதிலும், 3 ஆண்டுகள் தாமதத்துடன் 2018 ஆம் ஆண்டில் அதன் வேலைகள் தொடங்கப்பட்டிருந்தது. அதேபோல பெறப்பட்ட கடனிற்காக 2017 இல் கடப்பாட்டு கட்டணங்களாக அண்ணளவாக | செயற்திட்டம் பரந்துசெல்லும் மீன்கள் தென்படுவதால் தாமதப்பட்டிருந்தது. மஹாவலி அதிகாரசபையின் கவனப்பில் நீர்தேக்கத்தின் அணைக்கட்டு வடிவமைப்பினை மாற்றுவதற்கு வேண்டப்பட்டது, சுற்றாடல் அனுமதிகளில் தாமதம், கோவிட் நோய்தொற்ற நிலையை மற்றும் பின்னர் நாட்டின் பொருளாதார சிக்கல் என்பவற்றால் பௌதீக முன்னெற்றம் 73 சதவீதத்தை அடைந்திருந்ததுடன் ரூபா 16,844 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் கடன் வசதி | குறிப்பிடப்பட்ட காலப் பகுதிக்குள் செயற்திட்ட வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் குறித்த இலக்குகள் அடையப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 28 மில்லியன் (ஐ.அ.டொலர் 177,931) செலுத்த வேண்டியிருந்தது. 2024 யூன் இறுதியில் செயற்திட்டத்தின் கடன் காலப்பகுதி முடிவடைவதுடன் ஒரு ஆண்டு கடன் நீடிப்பு ஏனைய சிவில் வேலைகள் மற்றும் நிர்மாண வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு 2025 யூன் 30 வரை வேண்டியிருந்தது. அதேபோல 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இச்செயற்திட்டம் ரூபா 14,269 மில்லியன் செலவழித்திருந்ததுடன் பௌதீக முன்னேற்றம் 64 சதவீதமாக இருந்தது. | காலாவதியாகும் போது 2024 யூலை 13 இல் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் 85 சதவீதமாக இருந்தது. இருக்கின்ற வேலைகளிற்காக நிதியளிப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு வேண்டுகையை சமர்ப்பித்திருந்தது. இதன்படி, 2024 இறுதிக்கு முன்னர் நீர் மின்சார உற்பத்தி தொடங்குவதற்கு இந்த செயற்திட்டத்தால் முடியுமென எதிர்பார்க்கப்பட்டது. | |
| (ஆ) | தேசிய பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் மேல், மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களில் பரிமாற்ற வலையமைப்பை விருத்தி செய்யும் நொக்கில் 04 பொதிகளின் கீழ் அமுலாக்கப்படடிருந்ததுடன் பரிமாற்ற நட்டங்களை குறைத்தல் 2015 சனவரியில் தொடங்கி 2018 சனவரியில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 39,942 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்த இந்த செயற்திட்டத்தின் பொதிகள் 1 மற்றும் 2 இல் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் இருக்காததுடன் அமுலாக்கலை இடைநிறுத்தியிருந்த பொதிகள் 3 மற்றும் 4 இன் மீளமுலாக்கலிற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டம் JICA நிதியளித்தல் நிறுத்தியமையால் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றத்தை அடைய முடியாதிருந்தது.<br><br>பெருளாதார சீரமைப்பு நடைபெறுகின்ற போது JICA நிதிகள் பெறுவதில் சிக்கல் காரணமாகபொதிகள் 01 மற்றும் 02 இலங்கை மின்சார சபை நதிகளை பயன்படுத்தி அமுலாக்கப் படுகின்றதுடன் பொதிகள் 03 மற்றும் 04 தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. இதன்படி, செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் இந்த செயற்திட்டம் மேற்கொள்ள முடியாதிருந்ததென தெளிவாக உள்ளது. | ஒழுங்கான கால இடைவெளியில் செயற்திட்டம் பூர்த்தியாக்கலிற்கான பரிந்துரைகள் மற்றும் நிறுத்தப்பட்ட வேலைகளின பூர்த்தியாக்கல் என்பன உடனடியாக அமுலாக்கப்பட வேண்டும். |

### 3.3 நட்டங்கள் மற்றும் சோதனங்கள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்வற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2010 சனவரி 27 இல் ஏற்பட்ட கார் விபத்து காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 898,400 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. இது விபத்து நிகழ்ந்து 14 ஆண்டகளாக இருந்த பொதிலும் அமைச்சு தற்போது வரையும் | இந்த நட்டங்களை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய தரப்பினரிடமிருந்து நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நட்டங்களை அறவிடுவதற்கோ அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ தவறியிருந்தது. | | |
| (ஆ) | அமைச்சிற்கு விடுவக்கப்பட்ட இலங்கை மின்சார சபையிற்கு சொந்தமான மோட்டார் வாகனம் 2009 மே 12 இல் விபத்திற்கு உட்பட்டிருந்தது. இது 15 ஆண்டுகள் கடந்திருந்த பொதிலும் அமைச்சு அரசாங்கத்திற்கு ரூபா 251,334 ஆன நட்டங்களை அறவிடுவதற்கோ அல்லது மீளாய்வாண்டு இறுதி வரையும் எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ தவறியிருந்தது. | முன்றாம் தரப்பினர் காப்புறுதியுடன் இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட இந்த வாகனம் விபத்திற்கு உட்பட்டமையால் விபத்திற்கு உட்படுத்திய தரப்பினரிடமிருந்து நட்டங்களை அறவிடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. இலங்கை மின்சார சபை சட்டமா அதிபரில் அறிவுறுத்தலால் வழக்கொன்றை தொடுப்பதற்கு அறிவித்திருந்தது. | உரிய தரப்பினரிடமிருந்து நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மின்சார சபையினுடைய உத்தியோகத்தர்களின் இராஜாங்க அமைச்சரின் கடமைகளிற்கு ஒதுக்கப்பட்டிருந்த PH-2913 ஆம் இலக்க டபிள் கப் வாகனம் துவிலப்பிட்டிய, பொசன் பகுதியில் திரும்புகின்ற அதேநேரம் கிட்டத்தட்ட 2.45 மு.ப அளவில் 2023 யூன் 07 இல் விபத்திற்கு உட்பட்டிருந்தது. 2023 யூலை 06 ரூபா 1,345,375 ஆன மதிப்பீடு பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் விபத்து உத்தியோகபூர்வ கடமையின் போது ஏற்பட்டதா பயணத்தின் தன்மை என்பவற்றினை மதிப்பிடுவதற்கு போதிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ராஜாங்க அமைச்சரின் பொது மக்கள் தொடர்பு உத்தியோகத்தரின் அலுவலக கடமைகளிற்காக PH-2913 ஆம் இலக்க வாகனம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதேநேரம் விபத்தினை அறிக்கையிடல், சாரதி அந்நெரத்தில் உத்தியோகபூர்வ பயணத்தை குறிப்பிடிருக்கவில்லை. இது தொடர்பில் மக்கள் உறவுகள் உத்தியோகத்தரிடமிருந்து வாக்கு மூலம் பெறுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப் பட்டிருந்ததுடன் 2024.04.24 இல் பொது மக்கள் உறவுகள் உத்தியோகத்தரும் இதனை வழங்கியிருந்தார். | தாமத் இல்லாமல் விபத்துக்கன் மீது முறையாக விசாரணைகள் மேற்கொள்தற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | (i) 2019 ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்ட இலங்கையினுடைய தேசிய மின்வலு கொள்கை மற்றும் உபாயங்கள் பிரகாரம், தேசிய நெறிப்படுத்தல் குழு உரிய கொள்கையின் அமுலாக்கலை மேற்பார்வை செய்வதுடன் உரிய குழு காலாண்டு இடைவெளியில் அமைச்சரவை கூட்டத்தில் | தேசிய நெறிப்படுத்தல் குழு நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை 2024 இல் மேற்கொள்ளப்படுகின்றன. | வினைத்திறனான கொள்கை அமுலாக்கலிற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| முன்னேற்றத்தை அறிக்கையிடப்படும். இருந்த போதிலும் கணக்காய்வற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் தேசிய நெறிப்படுத்தல் குழு 2023 ஆம் ஆண்டின் போது எவ்வித கூட்டங்களையும் நடாத்தியிருக்கவில்லை. | | |
| (ii) ஒவ்வொரு 02 ஆண்டுகளிலும் அவசர கொள்கை கூற்றில் உள்ளடக்கப்பட்ட செயலாற்றல் கால அட்டவணையை திருத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த பொதிலும் இதனை திருத்துவதற்கு 2019 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப செயற்பாட்டு குழு நியமிக்கபபட்டிருந்ததுடன் செயலாற்றல் கால அட்டவணை தொழல்நுட்ட செயற்பாட்டு குழுவால் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளிற்கும் மீளாய்வு செய்யப்பட்டிரந்தது. கோவிட் நோய்தொற்று பொன்ற பல்வேறு காரணங்களால் 2020 மற்றும் 2021 இல் திருத்தங்கள் செய்யப் பட்டிருக்கவில்லை.<br>எவ்வாறாயினும் மீளாய்வு குழு 2024 இல் நியமிக்கப் பட்டிருந்ததுடன் திருத்தங்களிற்கான பரிந்துரைகளும் தயாரிக்கப்படுகின்றன. | கொள்கையை வினத்திறனாக திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii). மேற்குறித்த செயலாற்றல் கால அட்டவணை உளளடங்கலாக அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட இலக்குகள் மற்றும் நோக்குகளை அடைவதை நோக்கிய முன்னேற்றத்தின் தொடக்கத்தின் பொது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| - அவசர பாதுகாப்பு சான்றிதழின் கீழான 4.1.d ஆம் பந்தியின் பிரகாரம் 2019 இறுதியில் தாபழகடகடபபட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட மினவலு துறையின் செயலாற்றல் மீதான ஆபத்தான தாககத்தை கொண்டிருக்க முடியுமென உள்ளக மற்றும் வெளியக நிச்சமின்மைகளின் ஆபத்து மதிப்பீட்டு சபை குறிப்பிடப்பட்ட பொதிலும் இது 2023 இறுதி வரையும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக மற்றும் வெளியக நிச்சமின்மைகள் மீது 2024 இல் ஆபத்து மதிப்பீட்டிற்கான சபை நியமிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படும். | கொள்கையில் உள்ளடக்கப்பட்ட நோக்குகள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| - வினைத்திறனான மின்வலு முன்னேற்றம் மற்றும் செயலாற்றலின் கால சட்டத்தின் பாதுகாப்பு என்பவற்றின் 2020 இல் | பொது இடங்களின ஒளியூட்டல் உள்ளடங்கலாக கிராம, நகர மற்றும் பிரதான வீதி ஒளியூட்டலிற்காக நியமங்கள் | கொள்கையில் உள்ளடக்கப்பட்ட நோக்குகள் மற்றும் இலக்குகளை |

| | | | |
|---|---|---|---|
| | பொது இடங்களில் ஒளியூட்டல் மற்றும் கட்டாய அடிப்படையில அமுலாக்கப்பட வேண்டியிருந்தவை பொது இடங்கள் உள்ளடங்கலாக கிராம, நகர மற்றும் பிரதான வீதி ஒளியூட்டல்களிற்காக ஒளியூட்டல் நியமங்களை அறிமுகப் படுத்துவதற்கு இது குறிப்பிடப்பட்ட போதிலும் உரிய நியமங்கள் வெளியிடப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்காக பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், அந்த நியமங்கள் 2022 இறுதியில் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் குறித்த அனுமதிகள் பெறப்பட்டிருக்கவில்லை. | வடிவமைத்தல் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அமைச்சு, உள்ளூராட்சி அதிகாரசபைகள், இலங்கை மின்சார சபை, இலங்கை மின்சார தனியார் கம்பனி மற்றும் இதனுடன் தொடர்புபட்ட ஆலோசனை சேவை முகவராக வேலைசெய்கின்ற நிலைபேறான மின்வலு அதிகாரசபை போன்ற அத்தகைய பங்குதாரரின் பங்கு பற்றலுடன் செயலமர்வுகளை நடாத்தியிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டு இறுதியில் அறிக்கை பூர்த்தியாக்கப்பபட்டது. இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட வீதி ஒளியூட்டல் நியமங்கள் மீதான இறுதி அறிக்கையிலுள்ள நியமம் அனுமதிக்கான மீளாய்வின் கீழ் உள்ளதுடன் 2024 இல் நடவடிக்கைகளை பூர்தியாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. | அடைவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கட்டளைகள் நிறுவகம் பொற்றோலிய அடிப்படை பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பவற்றிற்காக முறயே 768, 1103 மற்றும் 595 ஆம் இலக்க நியமங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சு இலங்கையில் கட்டாயமாக அந்த நியமங்களை பனிபற்றுதலை செய்வதற்கு முறையான நிகழ்ச்சித்திட்டம் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், அனுமதியளிக்கப்பட்ட முகவர் தற்போது இலங்கையில் அந்த எரிபொருளின் நியமத்தை பரீட்சிப்பதற்கு தாபிக்கப் பட்டிருக்காததுடன் அமைச்சு அதற்காக முறையான நிகழ்ச்சித்திட்டத்தை தயாரிப்பதற்கு தவறியிருந்தது. | சர்வதேச ரீதியாக அனுமதித்த ஆய்வுகூட வசதிகள் வரையறுத்த பெற்றொலிய களஞ்சிய தேமினலின் (CPSTL) பெற்றோலிய உற்பத்திகள் மீதான ஆய்வுகூட பரிசோதனைகள் மேற் கொள்வதற்கு தாபிக்கப் பட்டிருந்ததுடன் சபுகஸ்கந்த பெற்றோலிய சுத்திகரிப்பு சாலை அவசியமான ஆய்வுகூட பரிசோதனைகள் அந்த ஆய்வுகூடங்களை பயன்படுத்தி மேற்கொண்டிருந்தன. சுதந்திரமாக செய்ய வேண்டிய ஆய்வுகூட பரிசொதனைகளால் மூன்னறாம் தரப்பினர் எரிபொரு வழங்குநர்கள் மற்றும் உரிய எரிபொருள் இயற்குமதியாளர்கள் அனுசரணையுடன் செய்யப்பட வெண்டியிருந்தது,பரஸ்ார உடன்படிக்கைகள் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுகூடங்களால் பரீட்சிப்புகள் மேற்கொள்ளப்படும். | மூன்றாம் தரப்பினரிடமிருந்து தொழில்நுட்ப உதவி பெறும் சாத்தியத்திற்கு போதிய கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் அரசாங்க முகவரால் செய்யப்பட்ட முதலீடுகளை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நாட்டினுடைய மின்சார உருவாக்கலின் 70 சதவீதம் 2021 நவம்பரில் அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்ட 2022 சனவரியில் மின்சக்தி அமைச்சால் வெளியிடப்பட்ட மின்சார தொழிலிற்கான பொதுக் கொள்கை வழிகாட்டலிற்கமைய 2030 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கக்கூடிய மின்வலுவிலிருந்து நிறைவேற்றப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன் அமைச்சின் பிரதான நோக்கங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், மின்சார உருவாக்கல் கலவையில் நீர் மின்சாரம் உள்ளடங்கலாக புதுப்பிக்ககூடிய மின்வலு வளங்களின் பங்களிப்பு 2023 ஆம் ஆண்டிற்கான 49 சதவீதமாக இருந்தது, 2023 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் வரைவு செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் 52 சதவீதமாக இருந்தது.<br><br>இதன்படி, 2030 ஆண்டளவில் புதுப்பிக்க்ககூடிய மின்வலு மூலம் மின்சார உருவாக்கலின் 70 சதவீதம் பெறும் இலக்கை அடைதல் சவலாக இருக்கக்கூடும் என அவதானிக்கப்பபட்டது. | “நீண்டகால மின்னுருவாக்கல் விரிவாக்க திட்டம் 2023-2042” மற்றும் இலங்கை நிலைபேறான சக்தி அதிகாரசபையின் புதுப்பிக்ககூடிய சக்தி எதிர்கால அபிவிருத்தி திட்டம் என்பவற்றின் அடிப்படையில் மேற்குறித்த இலக்குகள் அடையப்பட்டிருந்தது. 2023 இறுதியளவில் மொத்த மின்சார இயலளவு 4991 MW இல் 3167 MW தொகை புதுப்பிக்ககூடிய சக்தி வளங்கள் ஊடாக மின்சாரம் உருவாக்கப் பட்டதுடன் புதுப்பிக்ககூடிய சக்தி வளங்கள் ஊடாக சேர்க்கப்பட்ட மொத்த இயலளவு 2023 அளவில் 8783 MW இற்கு அதிகரிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. இதற்காக 2024-2030 அளவில் அண்ணளவாக ஐ.அ.டொலர் 6110 முதலீடு செய்யப்பட வேண்டியிருந்தது.<br><br>இந்த அமைச்சு அந்த இலக்குகளை அடைவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | பொது மக்கள் கொள்கை வழிகாட்டல் பின்பற்றப்பட வேண்டியதுடன் அதன் இலக்குகளை அடைவதற்கு தேவையான நடவடிக்கைகள் திட்டத்தில் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | அமைச்சின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப் பட்டிருககாத பதல கடமை அடிப்படையில் முறையான நியமனம் செய்யப்பட்டதென முன்னைய ஆண்டு கணக்காய்வு அறக்கையில் அவதானிப்புகளில் உள்ளடக்கப் பட்டதுடன் 07 ஆண்டுகளாக சம்பளங்காக ரூபா 2,047,347 கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும் 2024 ஏப்ரல் 30 வரையும் சொல்லப்பட்ட தொகையை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் உத்தியோகத்தர்களை கொண்டுள்ள குழு ஆரம்ப புலனாய்வு நடாத்துவதற்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் மேலும் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் நி.பி. 135, 136, 137, 138 இன் பிகாரம், முறையற்ற படி கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் மின்சார துறையில் சிரேஸ்ர மட்டத்தல் இருபத்தியேழு 27 வெற்றிடங்கள் நிலவியதுடன் பணிப்பாளர் நாயகப் பதவி 2020 இலிருந்து வெற்றிடமாக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டிலிரந்து சட்ட உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாக இருந்தது. எவ்வாறாயினும், அந்த வெற்றிடங்களில் 04 பதவிகள் மாத்திரம் 2024 மே மாதமளவில் நிரப்பப்பட்டிருந்தது. | அந்த வெற்றிடங்களை நிப்புவதற்கு பொது நிர்வாக அமைச்சிற்கு 2024.01.06 ஆந் திகதிய கடிதம் மூலம் வேண்டுகை செய்யப்பட்டிருந்தது.<br><br>மின்சக்தி துறையில் சிரேஸ்ர மட்ட வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருந்தது. மேலதிக செயலாளரின நியமனத்தினை பெறுவதற்கு பொது நிர்வாக அமைச்சிற்கு 2024.03.22 ஆந் திகதிய கடிதமும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைத்தின் ஆலோசனையுடன் முறையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் மின்வலுத் துறை தொடர்புபட்ட அனுமதிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை 103 ஆக இருந்தது. உள்ளபடியான பதவியணி 76 ஆக இருந்ததுடன் 27 வெற்றிடங்கள் நிலவின. | அந்த வெற்றிடங்களை நிப்புவதற்கு பொது நிர்வாக அமைச்சிற்கு வேண்டுகை செய்யப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைத்தின் ஆலோசனையுடன் முறையாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |